பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத் தலைவர்/ செயல் அலுவலர்
அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை: ப.நாராயணன்.

ந.க.எண்:01/2024/கொ.ஊ.ம நாள்:26.02.2024.

பொருள்: மனைவரண்முறை – திண்டுக்கல் மாவட்டம் – வேடசந்தூர் தாலுகா – வடமதுரை ஊராட்சி ஒன்றியம் – பா.கொசவபட்டி ஊராட்சி – சர்வே எண்:434/1,3Bல் 2.31 ஏக்கர்(9354 ச.மீ) பரப்பிப் பிரிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள 54 மனைகளை வரண்முறைப்படுத்தி உத்திரவிடல் – சார்பு

பார்வை:1.திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்: ந.க.எண்:7FO/A42G/2023/TCP நாள்:02.06.2024

2.அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019

3.அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.

4.அரசாணை எண்: 18, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:09.12.2020.

5.அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017.

6.பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் தீர்மானம் எண்:5 நாள்: .01.2024.

7.திரு.திருப்பதி த/பெ ராமசாமி R.H.காலணி வேடசந்தூர் விண்ணப்பம் நாள்:13.02.2024

8.சார்பதிவாளர் வடமதுரை ந.கஎண்:8./சா.அ/வடமதுரை/2024 நாள்:16.02.2024

9.பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கடிதம் ந.க.எண்:01/2024/கொ.ஊ.ம நாள்:16.02.2024.

10.திரு.திருப்பதி த/பெ ராமசாமி R.H.காலணி வேடசந்தூர் விண்ணப்பம் நாள்:21.02.2024.

*****

உத்தரவு.

பார்வை 1ல் காணும் திண்டுக்கல் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை ஊராட்சி ஒன்றியம், பா.கொசவபட்டி ஊராட்சி சர்வே

எண்: 434/1,3Bல் 2.31 ஏக்கர் (9354 ச.மீ) பரப்பில் பிரிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப் பிரிவில் அமைந்துள்ள 54 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO:42/2024 என எண்ணிட்டு வரன்முறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் மேலும் மனைகளை வரன்முறைப்படுத்தும் முன் பார்வை 2, 3 மற்றும் 4ல் காணும் அரசாணைகளின்படி, உள்ளாட்சியால் வளர்ச்சி கட்டணமும் பார்வை 5ல் காணும் அரசாணை விதி எண் 3ன் படி மனை 1க்கு ரூ.1000/- வீதம் பரிசீலனைக் கட்டணம், விதி எண்9ன் படி நிலப்பயன்மாற்றக் கட்டணம் (நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பில் 3%) தொகையும் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6ல் மேற்படி பிரிக்கப்படவுள்ள 54 மனைகளை வரன்முறைப்படுத்த பா.கொசவபட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

பார்வை 9ல் காணும் பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் கடிதத்தின் வாயிலாக வளர்ச்சிக்கட்டணம், பரிசீலனைக் கட்டணம் மற்றும் நிலப்பயன்மாற்றக்கட்டணம் ஆகியவற்றை செலுத்துமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 9 மற்றும் பார்வை 10ன் வாயிலாக மனுதாரர் கீழ்கண்டவாறு கட்டணங்களை செலுத்தி அசல் நகல்களை சமர்பித்துள்ளார்.

வளர்ச்சிக் கட்டணம் சதுர மீட்டருக்கு 25 வீதம் 54 மனைகளின் பரப்பு 6190.15 ச.மீ X ரூ.25 = ரூ.154754/- மற்றும் பரிசீலனைக் கட்டணம் ஒரு மனைக்கு ரூ.1000/- வீதம் 54 மனைகளுக்கு ரூ.54000/- சேர்த்து மொத்தம் ரூ.208754/- திண்டுக்கல் நேருஜி நகர் இந்தியன் வங்கி கிளையில் பராமரிக்கப்படும் பா.கொசவபட்டி ஊராட்சி மன்ற SNA கணக்கு எண்ணில் (A/C No:7386930286)ல் 21.02.2024ம் தேதி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் நிலப்பயன்மாற்றக் கட்டணம் ரூ.13860/- வேடசந்தூரில் பராமரிக்கப்பட்டு வரும் பாரத மாநில வங்கி கிளையில் DPC:0217-60-800-AS22709 என்ற அரசுத் தலைப்பில் 17.02.2024ம் தேதி மனுதாரரால் செலுத்தப்பட்டு அசல் நகல் சமர்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரரால் பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத்திற்கு வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் 01/2024/145 (13 தாள் கொண்டது) தானப்பத்திரம் வாயிலாக 09.01.2024ம் தேதி மனைப்பிரிவில் 36.72 சதுர மீட்டர் (0.59%) உள்ளாட்சி அமைப்பின் பயன்பாட்டுக்கு 3163.85 ச.மீ (மூலை முடக்கு உட்பட)மனைப்பிரிவு சாலைகளும் தரப்பட்டுள்ளது.

மனுதாரரால் தமிழக மின்சார வாரிய பயன்பாட்டிற்கு வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில், 01/2024/146 (12 தாள்களை கொண்டது.)

தானப்பத்திரம் வாயிலாக 09.01.2024ம் தேதி மனைப்பிரிவில் 36.32 ச.மீ (0.59%) தானக்கிரையம் செய்து தரப்பட்டுள்ளது.

மனுதாரரால் பொது பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான தொகை ரூ.31000/- உரிய அரசுத் தலைப்பில் 12.01.2024ம் தேதி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத் தீர்மானம் மற்றும் மனுதாரரால் வளர்ச்சிக் கட்டணம், பரிசீலனைக்கட்டணம், நிலப்பயன்மாற்றக் கட்டணம் ஆகியவை செலுத்தப்பட்டதன் அடிப்படையில் பார்வை 1ல் காணும் கடிதத்துடன் வரப்பெற்ற மனைப்பிரிவு படத்தில் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 54 மனைகளை (மனை எண்: 1 முதல் 54 வரை) மனைப்பரப்பு 6190.15 ச.மீ பா.கொசவபட்டி ஊராட்சி மன்றத்தால் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:1. பார்வை 1ல் காணும் கடிதம்.

2.வரைபட நகல் ஒன்று.

P.நாராயணன்

ஊராட்சி மன்ற தலைவர்/

செயல் அலுவலர்,

பா.கொசவபட்டி ஊராட்சி மன்றம்

வடமதுரை ஊராட்சி ஒன்றியம்.

தலைவர்,
P.கொசவபட்டி ஊராட்சி,
வடமதுரை ஊராட்சி ஒன்றியம்.
திண்டுக்கல் மாவட்டம்.

பெறுநர்:

திரு.ரா.திருப்பதி,
த/பெ ராமசாமி
எண்:2/524 R.H காலனி,
வேடசந்தூர்,
திண்டுக்கல்-624710.

நகல்:

நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், விவேகான்ந்தா நகர், திண்டுக்கல்.